


# எதிர்காலத்தில் கோலாலம்பூரில் பொது போக்குவரத்து மட்டுமே

**கோலாலம்பூர், ஜூன் 25- மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் வருங்காலத்தில் பொதுப் போக்குவரத்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடும். தனியார் வாகனங்களைப் பார்க்க முடியாது என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்றுக் கூறினார்.**

**2040 கோலாலம்பூர் உள்ளூர் பெருந்திட்டத்தை நேற்று அறிமுகம் செய்த அவர், மலேசியத் தலைநகரின் எதிர்கால மேம்பாட்டு முதுகெலும்பாகப் பொதுப் போக்குவரத்து இருக்கும் என்று சொன்னார். எம்ஆர்டி உட்பட போக்குவரத்து அமைச்சின் கீழ் பொதுப் போக்குவரத்து புதிய கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.**

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### எதிர்காலத்தில் கோலாலம்பூரில்...

இந்த நகர்வுக்கான ஆதரவு அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப் பெருந்திட்டத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் முன்னுரிமையாக பொதுப் போக்குவரத்து இருக்கும். தனியார் வாகனங்களுக்கு இந்த முன்னுரிமை வழங்கப்படமாட்டாது.

பெரும்பான்மையானோருக்கு ஆதரவாக இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக இங்கு செராசில் உள்ள டேவான் பண்டாராயா கோலாலம்பூர் பயிற்சிக் கழகத்தின் 2040 கோலாலம்பூர் உள்ளூர் பெருந்திட்டத்தை அறிமுகம் செய்து உரையாற்றியபோது நிதி அமைச்சருமான அன்வார் தெரிவித்தார்.

எம்ஆர்டி போன்ற புதிய திட்டங்கள் போக்குவரத்து அமைச்சின் கீழ் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளே மாநகரில் அனைவரின் சௌகரியத்தை உறுதிப்படுத்தும் முதுகெலும்பாக இருக்கும் என்பதையும் நினைவுறுத்த விரும்புகிறேன் என்றார் அவர்.

இதனிடையே 2040ஆம் ஆண்டுக்குள் பொதுமக்கள் 70 விழுக்காடு பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதற்குரிய திட்டங்களில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் கவனம் செலுத்தும் என்று அதன் மேயர் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷாரிப் தெரிவித்தார்.

வாகனப் போக்குவரத்துப் பெருந்திட்டத்தில் நடைபாதைகளும் சைக்கிள் பாதைகளும் இடம்பெற்றிருக்கும் என்று குறிப்பிட்ட அவர், பசுமை நிறைந்த நடைபாதைகள் பொதுமக்களுக்கு இதமான சுற்றுச்சூழலைத் தரக்கூடியதாக இருக்கும் என்று தம்முடைய உரையில் குறிப்பிட்டார்.

அதேசமயம் மேம்பாட்டுத் தரவுகளின் உண்மையான விவரங்களை சரியான நேரத்தில் தருவதற்கு கோலாலம்பூர் இரட்டை நகர் டிஜிட்டல் திட்டத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அறிமுகம் செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2040 கோலாலம்பூர் பெருந்திட்டம் இவ்வாண்டு மே மாதம் அரசாங்க கெஸட்டில் பதிவு செய்யப்பட்டு ஜூன் 11ஆம் தேதி அமலுக்கு வந்தது என்ற அவர், புதிய வீடமைப்புத் திட்டங்கள் அனைத்தும் அவற்றின் வடிவமைப்பில் சூரிய ஒளித்தகடு சக்தியையும் உள்ளடக்கி இருக்க வேண்டும் என்று முன்னதாகப் பிரதமர் அறிவித்தார்.

கோலாலம்பூர் மக்கள் நெருக்கடிமிக்க ஒரு மாநகராக மட்டும் இருக்கக்கூடாது. ஆனால் நட்புறவு நிறைந்த மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய வாழ்வியல் சூழலைக் கொண்டிருக்க வேண்டும் என்பது மலேசிய மடானி கட்டமைப்பின் முக்கியக் கொள்கையாக இருக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழலை ஊக்குவிப்பதற்கு 254 கிலோ மீட்டர் நீளமுள்ள பசுமை இணைப்புத் திட்டத்தில் சமூகப் பூங்காக்கள் உருவாக்கப்படும் என்றும் சொன்னார். பழைய அரசாங்க வீடுகளுக்குப் பதிலாக அவை தகர்க்கப்பட்டு மறு மேம்பாட்டுத் திட்டத்திற்கு 139 பகுதிகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன என்றும் மைமுனா சொன்னார்.